**தலைப்பு 213 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை கடற்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்பு பெறுவனவுகள் மற்றும் வைப்பு செலுத்தல்கள் ரூபா 1,725,425 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**1.6.2 வணிக முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வருடாந்தம் சரியாக பெறுமானத்தேய்வு சதவீதத்தினை பயன்படுத்தாமையால் வாகன பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 1,404,310 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | புத்தகங்களை கைதவிர்ப்பு செய்வதன் மூலம் கிடைத்த மற்றும் ஏனைய பெறுவனவுகள் ரூபா 4,392,207 தொகை மீளாய்வாண்டின் போது புத்தக விற்பனை வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | விற்பனை வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (இ) | காணிகள் மற்றும் கட்டிடங்களை தனித்தனியாக கணக்கு வைக்காத காரணத்தினால் ரூபா 11,709,740 பெறுமதியான காணிகளுக்கும் ரூபா 1,170,974 பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஈ) | தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 38,400,000 ஆன அச்சீட்டு கடன் கொடுத்தோர் மீதிகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் கொடுத்தோர் மீதிகளினுள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 59,884,000 தொகையான கடன் கொடுத்தோர் மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (உ) | ரூபா 50,000 தொகையான கடன் கொடுத்தோர் மீதியொன்று கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2009 ஆம் ஆண்டு முதல் அச்சீட்டு கட்டணங்களுக்காக தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா 7,431,012 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (எ) | பக்கங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்காக அச்சீட்டாளர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,334,503 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஏ) | அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் தேறிய வருமானமாக ரூபா 826,220,942 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடசாலை புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் வழிகாட்டி புத்தகங்களை இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக கல்வி அமைச்சிடமிருந்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 4,598,736,566 ஆன தொகை கணக்குகளில் செலவினமாகவும் விற்பனை வருமானமாகவும் பதிவு செய்தமையால் ஏற்பட்ட தேறிய இலாபமென அவதானிக்கப்பட்டது. | தேறிய இலாபம் சரியாக இனங்காணப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கிய போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக்கடந்த ரூபா 4,887,869 தொகையான 629 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாது குறித்துரைக்கப்பட்ட திட்டமொன்றின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் 02 செலவின விடயங்களுக்கு உரிய 21 சதவீதம் மற்றும் 57 சதவீதமான ரூபா 8,755,596 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன்பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**2.2 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பணி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 03 வருடங்களைக் கடந்த ரூபா 9,500 தொகையான கடன் மீதி அறவிடுவதற்கு தவறியிருந்தது. | தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 524,692 தொகையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட தொகை ரூபா 459,892 அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற பெறுமதி இனங்காண முடியாத மேலதிகமான 79,505 எண்ணிக்கையான புத்தகங்கள் மற்றும் ரூபா 31,515,577 பெறுமதியான மேலதிக புத்தகங்கள் 237,846 தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக புத்தகத் தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற புத்தகங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விற்பனைக்கு பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற புத்தகங்கள் தொடர்பில் திணைக்களத்தின் கூட்டம் மூலம் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்ட தாகவும், அதன் பிரகாரம் இந்த புத்தகங்கள் தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படுவதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பாடவிதானம் மாற்றமடைந்துள்ள ரூபா 2,590,780 பெறுமதியான 12,609 எண்ணிக்கையான ஆசிரிய வழிகாட்டி கையேடுகள் மீளாய்வாண்டின் இறுதியில் கைதவரிக்கப்பட்டிருந்தது. | ஆசிரியர் வழிகாட்டி கைநூல்களின் தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில வருடங்களின் தேவைப்பாட்டிற்காக ஒரே தடவைகள் அச்சிடுதல் மற்றும் பாடவிதானம் மாற்றமடைந்ததன் காரணமாக இந்த புத்தகங்களை கைதவிர்க்க நேர்ந்துள்ளமை. |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் பணிகள் 99 சதவீதம் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய தேவைப்பாடு சரியாக இனங்காணப்படாமையால் அச்சிடப்பட்ட 439 வகையான பாடப்புத்தகங்களுக்குரிய ரூபா 1,388,025,219 பெறுமதியான 7,683,625 எண்ணிக்கையான பாடப்புத்தகங்களின் இருப்பொன்று 2020 சனவரி 15 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | பாடப்புத்தகங்களின் தேவைப்பாடு சரியாக தீர்மானிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடங்களின் போது பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டினை கணிப்பீடு செய்வதனை அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய அளவு கோல்கள் உள்ளடக்கப்பட்டு புதிய திட்டமொன்று தயாரிக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் |
| (ஈ) | 11 ஆந் தரத்திற்குரிய இந்து சமய பாடப்புத்தகங்கள் வழுக்களுடன் காணப்பட்டமையால் 2019 ஆம் ஆண்டின் போது இந்த புத்தகங்களை மீள அச்சிட்டு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,326,740 பெறுமதியான வழுக்களுடைய 8,945 எண்ணிக்கையான பாடபுத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | பாடப்புத்தகங்களை தயாரிக்கும் போது முடியுமான அளவு தவறுகளை குறைவான அளவில் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த புத்தகத்தில் உள்ள பிரச்சினை காரணமாக பயன்பாட்டிலிருந்து அகற்ற நேர்ந்துள்ளதாக |
| (உ) | தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய பாடப்புத்தகங்களுக்காக கொடுப்பனவுகளை | எதிர்வரும் பெறுகை பணிகளை மேற்கொள்ளும் போது அச்சீட்டாளர்களுக்கு புள்ளிகளை வழங்கும் | பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான அச்சீட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் போது |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளும் போது பக்கங்கள் குறைவான மற்றும் அதிகரித்தமை ஆகியவற்றுக்காக முறையே ரூபா 1,475,479 கூடுதலாகவும் ரூபா 1,375,890 குறைவாகவும் செலுத்தப்பட்டிருந்தது. | போதும் தரமான புத்தகங்களை வழங்குவதில் கடந்த கால செயலாற்றல் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | பக்கங்கள் குறைவடைதல் மற்றும் அதிகரித்தல் ஆகியன தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக நேர்க்கின்றமை என்பது |
| (ஊ) | பாடப்புத்தகங்களில் உள்ள கடதாசியின் மற்றும் அட்டையின் தரம் குறைவடைந்தமையின் காரணத்தினால் சுமார் 2,678,000 பிரதிகளுக்காக ரூபா 1,099,282 ஆன தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் பெறுகை பணிகளை மேற்கொள்ளும் போது அச்சீட்டாளர்களுக்கு புள்ளிகளை வழங்கும் போதும் தரமான புத்தகங்களை வழங்குவதில் கடந்த கால செயலாற்றல் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | அச்சீட்டு கடதாசிகளின் சான்றினை தரப்படுத்துவதற்காக அச்சீட்டு நிறுவனத்தின் கடதாசிகளை இறக்குமதி செய்யும் போது பெறப்படும் ளுபுளு சான்றிதழினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது |
| (எ) | மீளாய்வாண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் அச்சீட்டு கட்டளைகளை வழங்கிய உடன்படிக்கைத் தொகை ரூபா 49,353,217 ஆன 54 ஆசிரிய வழிகாட்டி கையேடுகள் மற்றும் 30 வகையான மேலதிக புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்சிடப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலப்பகுதியினுள் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலதிக புத்தகங்களை தயாரித்தல் ஆரம்பம் முதல் அச்சிடப்பட்ட புத்தகங்கள் களஞ்சியத்திற்கு கிடைத்தல் வரையான அனைத்து கட்டத்திற்காகவும் கால அடிப்படையிலான திட்டமொன்று தயாரிக்கப்படும் என்பதும், ஆசிரிய வழிகாட்டி கையேடுகளை தயாரிப்பதில் தாமதத்தினை தவிர்ப்பதற்காக தேசிய கல்வி நிறுவகத்துடன் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும் என்பது. |